கொள்கைக் குறிப்பு

# வர்த்தகக் குறியீடுகளின் பதிவிற்கு வசதியேற்படுத்தல்:
## சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை வியாபாரச் சின்னங்கள்

## I. சுருக்கம்


இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்துவதில் "பெறுமதி சேர்த்த" பொருட்களின் முக்கியத்துவத்துவம் தொடர்பாக குறிப்பிடத் தகுந்த கொள்கைக் கலந்துரையாடல்கள் நிலவுகின்றன. இருப்பினும், பெறுமதி சேர்த்தலின் ஒரு வடிவமாக குறியீடிடுதல் (branding) இன்னும் போதுமான கொள்கை அங்கீகரிப்பைப் பெறவில்லை. வியாபார குறியீடிடுதலும் குறியீட்டை பாதுகாத்தலும் வர்த்தகக் குறியீடுகளை பதிவு செய்வதற்கான திறனில் தங்கியுள்ளது. வியாபாரக் குறியீடானது குறியீட்டுப் பொருளின் பெயர் மற்றும் இலச்சினை ஆகியவற்றை பிரதிபலிப்பதோடு, வியாபாரக் குறியீடு பிரதிபண்ணப்படுவதற்கு எதிரான சட்டப் பாதுகாப்பினையும் வழங்குகிறது.

இலங்கை வியாபாரங்கள் அதிகரித்த அளவில் குறியீடிடுவதில் ஈடுபடுகின்றன. கடந்த பல தசாப்தங்களாக இலங்கையர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வர்த்தகக் குறியீடுகளை பதிவிற்கான கிராக்கியில் ஓர் அதிகரிப்பு நிலவுகிறது என்பது இந்தப் போக்கினைப் பிரதிபலிக்கிறது.

தற்போது ஏற்றுமதியாளர்கள் தமது வர்த்தகக் குறியீடுகளை உற்பத்தி செய்யும் நாட்டிலும் ஏற்றுமதி சென்றடையும் நாட்டிலும் பதிவு செய்யவேண்டும். எனினும், சொந்த நாட்டிற்கு வெளியே வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்தல் சிரமமானதும், காலத்தை விழுங்குவதும் மற்றும் செலவுமிக்கதுமாகும். பல இலங்கையர்கள் இச்சிரமங்கள் பற்றியும் செலவுகள் பற்றியும் முறையிட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில்தான் அரசாங்கம் 2015 இல் மெட்றிட் உடன்படிக்கைக்கு (The Madrid Protocol) இணங்கத் தீர்மானித்தது.

மெட்றிட் உடன்படிக்கை வெளிநாடுகளில் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வதற்கான ஓர் எளிமையான சர்வதேச முறைமையாகும். அது இலங்கை வியாபாரங்களுக்கு சர்வதேச வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்யும் சுமையை எளிதுபடுத்தும். எனினும், மெட்றிட் உடன்படிக்கையில் இணைவது, இலங்கை வியாபாரங்களினால் எதிர்நோக்கப்படும் தொடர்புடைய சவால்களை, அதாவது இலங்கையில் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்யும் சவாலைத் தீர்த்து வைப்பதற்கு உதவுமென்று கருதமுடியாது.

இலங்கையில் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வது மெட்றிட் உடன்படிக்கையிலிருந்து பயனடைவதற்கான ஒரு முக்கிய அடியெடுப்பாகும். எனினும், இலங்கையில் தமது வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வதில் வியாபாரங்கள் அடிக்கடி தடைகளை எதிர்நோக்குகின்றன. மெட்றிட் உடன்படிக்கையில் இணைவது இலங்கையில் உள்நாட்டு வியாபாரங்கள் எதிர்நோக்கும் நீண்டகால தாமதங்களைத் தீர்த்து வைக்காது. ஒவ்வொரு ஆண்டும் பதிவிற்கான உள்நாட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கும் உள்நாட்டு வர்த்தகக குறியீட்டுப பதிவுகளின எண்ணிக்கைக்குமிடையே விரிசலாகும் இடைவெளி மீதும் அது சிறிதளவு தாக்கத்தையே கொண்டிருக்கம். இலங்கையில் இப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தவறுவது மெட்றிட் உடன்படிக்கையில் இணைவதன் பயனை கணிசமானளவு மட்டுப்படுத்தும்.


### முக்கிய கண்டறிதல்கள்:

- இலங்கை வர்த்தகக் குறியீட்டுக்கான கேள்வி அதிகரித்து வருகிறது: இலங்கை வியாபாரங்களினால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வதற்கான கேள்வி கடந்த தசாப்தத்தில் கணிசமானளவு அதிகரித்துள்ளது.
- மெட்றிட் உடன்படிக்கை இலங்கைக்குப் பயனளிக்கும்: மெட்றிட் உடன்படிக்கையில் இணைவது, வெளிநாடுகளில் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வதை துரிதமானதாகவும் எதிர்வுகூறத்தக்கதாகவும் செலவு குறைந்ததாகவும் ஆக்கக்கூடும். உறுப்பு நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் அனைத்து சர்வதேச விண்ணப்பங்களும் 1.5 ஆண்டுகளில் பரிசீலித்து முடிவுறுத்தப்படுவதை அது உறுதி செய்கிறது. எனினும், சொந்த நாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட வர்த்தகக் குறியீட்டு பதிவிற்கான விண்ணப்பங்கள்மீது கால நிபந்தனையொன்றை அது விதிக்கவில்லை.
- இலங்கையில் நிலவும் தடைகள் மெட்றிட் உடன்படிக்கையின் பயன்களைக் குறைக்கின்றன: சொந்த நாட்டில் வர்த்தகக் குறியீட்டுப் பதிவிற்கான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பது மெட்றிட் நடைமுறையின் மூலம் வெளிநாட்டில் வர்த்தகக் குறியீட்டுப் பதிவிற்காக விண்ணப்பிக்கும் நடைமுறையில் தேவைப்படும் ஒரு முதல் படிநிலையாகும். தற்போது இலங்கையில் ஒரு வர்த்தகக் குறியீட்டிற்கான விண்ணப்பத்தை பரிசீலித்து முடிவுறுத்துவதற்கு தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு (NIPO) 3-5 வருடங்கள் தேவைப்படுகின்றது. இந்தப் பிரச்சினையை சரிசெய்யத் தவறுவது மெட்றிட் உடன்படிக்கையில் இணைவதன் பயனை மட்டுப்படுத்தும்.
- வினைத்திறன்மிக்க ஒரு NIPO இல்லாத மெட்றிட் உடன்படிக்கை உள்நாட்டு நிறுவனங்களைப்

## கொள்கைக் குறிப்பு

பாதிக்கும்: மெட்றிட் நடைமுறை வெளிநாட்டு வர்த்தகக் குறியீட்டு பதிவிற்கான விண்ணப்பங்களை 1.5 ஆண்டுகளில் பரிசீலித்து முடிக்குமாறு உறுப்பு நாடுகளுக்கு கடப்பாடு விதிக்கிறது. எனினும், உள்நாட்டு விண்ணப்பங்களை பரிசீலித்து முடிப்பது தொடர்பாக அத்தகைய கடப்பாடு இல்லை. இந்த ஒவ்வாமையானது, உள்நாட்டு விண்ணப்பங்களைப் புறந்தள்ளி வெளிநாட்டு விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு இட்டுச் செல்லக்கூடும். அத்தகைய முன்னுரிமை உள்நாட்டு விண்ணப்பங்களின் பரிசீலிப்பை மேலும் தாமதப்படுத்தி அதன்மூலம் உள்நாட்டு நிறுவனங்களுக்குக் கேடு விளைவிக்கும்.

### பரிந்துரைகள்:

NIPOஐ மேலும் வினைத்திறன்மிக்கதாக்குவது மெட்றிட் உடன்படிக்கையில் இணைவதன் பயனை அடைவதற்கு முக்கியமாகும். இந்தச் சூழ்நிலையில், பின்வரும் கொள்கை விதப்புரைகள் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்:

1. வியாபாரம் மற்றும் வணிகம் தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் கைத்தொழில், வாணிப அமைச்சு ஆகியவற்றின் மூலம் ஒரு காலாண்டு அடிப்படையில் NIPO வின் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல். இந்த மீளாய்வின் நோக்கம் வர்த்தகக் குறியீடுகளுக்கான உள்நாட்டு விண்ணப்பங்கள் 1.5 ஆண்டுகளில் பரிசீலித்து முடிவுறுத்தப்படுவதை உறுதி செய்தல், தேங்கிக் கிடக்கும் உள்நாட்டு விண்ணப்பங்களின் நிலுவைகளைக் குறைத்தல் மற்றும் சேவை நிறைவேற்றமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அமைந்திருப்பதை உறுதிப்படுத்தல் ஆகியனவாகும்.
2. உள்நாட்டு வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்தல் தொடர்பாக ஒரு வெளிப்படையானதும் தேடி காணக்கூடியதுமான இணையத் தரவுத் தளமொன்றை நிறுவுதல். அத்தகையதொரு தரவுத் தளம் உள்நாட்டு விண்ணப்பதாரர்களுக்கு நேரத்தையும் செலவையும் மிச்சப்படுத்தும். ஏனெனில், முன்னைய பதிவுகளோடு முரண்படும் விண்ணப்பங்களை தவிர்த்துக்கொள்ளக்கூடிய சிறந்த நிலையில் அவர்கள் இப்போது இருப்பார்கள். அது விண்ணப்பங்களைப் பரிசீலித்து முடிவுறுத்துவதில் NIPO வின் வேலைப் பளுவையும் குறைக்கும்.

### ஆய்வு பற்றிய மேலோட்டம்

#### கடந்த பல ஆண்டுகளாக வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வதற்கான கேள்வி அதிகரித்துள்ளது:

ஏனையவற்றிலிருந்து தமது உற்பத்திப் பொருட்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக ஒரு பொறுப்பு முயற்சியினால் பயன்படுத்தப்படும் தனிச் சிறப்புமிக்க இனங்காணல் அடையாளங்களாகிய வர்த்தகக் குறியீடுகள் சந்தைத் தளத்தில் ஒரு வியாபாரத்தின் நற்பெயரை பிரதிபலிக்கின்றன. எனவே, பதிவு செய்வதன் மூலம் வர்த்தகக் குறியீடுகளைப் பாதுகாப்பது, அவ்விலச்சினையில் மேற்கொள்ளப்படும் முதலீட்டைப் பாதுகாப்பதில் ஒரு முக்கியமான அடியெடுப்பாக அமையும். இந்நடைமுறை குறிப்பாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உற்பத்திப் பொருட்களுக்கு அல்லது சேவைகளுக்கு வியாபாரக் குறியீடிடுவதன் மூலம் போட்டித்தன்மைமிக்க அனுகூலமொன்றைப் பெற்றுக்கொள்ள விளையும் நிறுவனங்களுக்கு முக்கியமானதாகும். பதிவு செய்யாது ஒரு வர்த்தகக் குறியீட்டைப் பயன்படுத்துவது நிறுவனங்கள் தாம் பாடுபட்டு ஈட்டிய இலச்சினை நன்மதிப்பை இழக்கும் இடருக்கு அவற்றை ஆளாக்கிவிடும்.

வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வதற்கு இலங்கை வியாபாரங்களினால் விடுக்கப்படும் வேண்டுகோள்கள் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. NIPO வினாலும் உலக புலமைச் சொத்து நிறுவனத்தினாலும் (WIPO) வெளியிடப்பட்ட தரவுகளின்படி, உள்நாட்டு வர்த்தகக் குறியீட்டு விண்ணப்பங்களின் ஆண்டொன்றிற்கான சராசரி எண்ணிக்கை கடந்த தசாப்தத்தில் அதற்கு முந்திய தசாப்தத்தோடு ஒப்பிடுகையில் 40% த்திற்கு மேல் அதிகரித்துள்ளது (அதாவது, 1996 - 2005 காலப்பகுதியிலிருந்த சராசரியான 3,215 லிருந்து 2006 - 2015 காலப்பகுதியில் சராசரியாக 4,541 விண்ணப்பங்களாக). அதே காலப்பகுதியல் இலங்கை நிறுவனங்களினால் சர்வதேச வர்த்தகக் குறியீட்டிற்காக செய்யப்பட்ட விண்ணப்பங்களின் சராசரி எண்ணிக்கை ஆண்டொன்றிற்கு 300% த்திற்கு மேல் அதிகரித்தது (அதாவது, 1996 - 2005 காலப்பகுதியிலிருந்த சராசரி 43 விண்ணப்பங்களிலிருந்து 2006 - 2015 காலப் பகுதியில் சராசரியாக 184 விண்ணப்பங்களுக்கு).

WIPO வினால் வெளியிடப்பட்ட தரவுகள் 2015 இல் இலங்கை நிறுவனங்கள் 31 நாடுகளில் வர்த்தகக் குறியீட்டிற்காக விண்ணப்பித்ததாக எடுத்துக்காட்டுகின்றன. இவற்றுள் 21 மெட்றிட் உறுப்பு நாடுகளாகும். இந்தப் புள்ளிவிபரங்கள் இலங்கை மெட்றிட் உடன்படிக்கையில் இணைந்தமையினால் இலங்கை நிறுவனங்கள் கணிசமானளவு பயனடைகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

#### வெளிநாடுகளில் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வது தொல்லையானது, செலவுமிக்கது, காலத்தை விழுங்குவது ஆகும்


தற்போது வெளிநாடுகளில் தமது வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் இலங்கை நிறுவனங்கள் தாம் தமது வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்ய விரும்பும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புலமைச் சொத்து (IP) அலுவலகங்களில் தனித் தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். இந்த நடைமுறை பல்வேறு நியாயாதிக்கங்களில் பல்வேறு மொழிகளில் பல விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதை உள்ளடக்கும். தனித் தனி பதிவுகளுக்கான செலவுகளும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள உள்நாட்டு சட்டத்தரணிகளை அமர்த்தும் இந் நடைமுறை மெட்றிட் உடன்படிக்கை மூலம் பதிவை

## கொள்கைக் குறிப்பு

நாடுவதைவிட செலவு மிகுந்ததாக ஆக்குகின்றன. மேலும், தற்போதைய முறைமையின்கீழ், பதிவு செய்வதற்கு எடுக்கும் காலம் நிர்ணயிக்கப்படவில்லை என்பதோடு, அது நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. தனியார் துறையினரால் வழங்கப்பட்ட பின்னூட்டலின்படி சராசரியாக இந்நடைமுறை ஏறத்தாழ இரண்டு முதல் ஐந்து ஆண்டுகள் எடுக்கிறது.


### மெட்றிட் நடைமுறை வெளிநாடுகளில் வர்த்தகக் குறியீடுகளைப் பதியும் சுமையைக் குறைக்கிறது

உரு 1: வதிவாளர் வர்த்தகக் குறியீடுகள் (எண்ணிக்கை)




மூலம்: தேசிய புலமைச் சொத்து அலுவலகம்.

உரு 2: விண்ணப்பங்களின் ஒரு நூற்றுவீதமாக பதிவுகளின் சராசரி எண்ணிக்கை.




மூலம்: உலக புலமைச் சொத்து நிறுவனம் புள்ளிவி-பரங்கள்

இலங்கை நிறுவனங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் தற்போதைய கடுமையான வழியோடு ஒப்பிடுகையில், மெட்றிட் உடன்படிக்கை வசதியானதாகும். ஏனெனில், பல நாடுகளில் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவதற்கு இந்நிறுவனங்கள் ஒரேயொரு விண்ணப்பத்தை ஒரே மொழியில் சமர்ப்பிக்கவும் ஒரு தொகுதி கட்டணத்தை செலுத்துவதற்குமே வேண்டியுள்ளது. 1.5 ஆண்டுகள் என்ற நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினுள் ஒரு வர்த்தகக் குறியீட்டை ஏற்றுக் கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான அறிவித்தலை வழங்குமாறு உறுப்பு நாடுகளுக்கு ஆணையிடுவதன்மூலம் இம்முறைமை எதிர்வுகூறலை மேம்படுத்துகிறது. இம்முறைமை ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டு சட்டத் தரணிகளை அமர்த்தவேண்டிய தேவையை அகற்றி, வர்த்தகக் குறியீட்டு உரிமையாளர்கள் பல்வேறு விண்ணப்பங்களில் செலவிடும் சட்டக் கட்டணம் மற்றும் காலம் ஆகியவற்றை மிச்சப்படுத்துவதால், அது ஒப்பீட்டளவில் செலவு குறைந்ததாகும்.

### உள்நாட்டு விண்ணப்பம்: ஒரு சர்வதேச பதிவிற்கான முதல் படி

சொந்த நாட்டில் பதிவிற்கு விண்ணப்பிப்பது மெட்றிட் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச பதிவிற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதற்கான ஒரு முன் நிபந்தனையாகும். உள்நாட்டு விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக காத்திருக்கும்போது சர்வதேச விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கமுடியும். எனினும், உள்நாட்டு விண்ணப்பத்தின்மீதான உறுதிப்படுத்தலின்றி மெட்றிட் முறைமையின்மூலம் விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் "மத்திய தாக்குதல்" என்று அறியப்படும் இடரை எதிர்நோக்கும். மத்திய தாக்குதல் என்பது உள்நாட்டில் பதிவு இரத்துச் செய்யப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் சர்வதேச பதிவை அடிப்படையாகக்கொண்ட சர்வதேச பதிவுகள் மற்றும் அனைத்து வெளிநாட்டு பதிவுகளும் தாமாகவே இரத்தாகும் ஒரு நிலைமையைக் குறிக்கும்.[1]

### இலங்கையில் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வது நியாயமற்ற வகையில் தொல்லையானது, காலத்தை விழுங்குவது

இலங்கையில் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்வது தொல்லையானது. தற்போது NIPO விடம் இணையவழியில் வர்த்தகக்குறியீடுகளைத் தேடும் வசதிகள் இல்லை. அதன் வலைத்தளம் இலங்கையில் வர்த்தகக் குறியீடுகள் மற்றும் வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்தல் நடைமுறை ஆகியன தொடர்பாக மிகக் குறைந்தளவு தகவல்களையே வழங்குகிறது. எனவே, வர்த்தகக் குறியீட்டு உரிமையாளர்கள் தாம் பதிய விரும்பும் வர்த்தகக் குறியீடுகள் பதிவிற்குக் கிடைப்பனவாக உள்ளதா என்பதை தேடியறிவதற்கு தாம் NIPO விற்கு நேரில் செல்லவேண்டும் அல்லது ஒரு பிரதிநிதியை அனுப்ப வேண்டும். இது விண்ணப்பிக்கும்

## கொள்கைக் குறிப்பு

நடைமுறையை மிகவும் தொல்லையானதாக்குகிறது. எனினும், இந்தியா மற்றும் துருக்கி போன்ற நாடுகளிலுள்ள IP அலுவலகங்கள் நேரடியாக IP அலுவலகங்களுக்குச் செல்ல செலவிடும் பணத்தையும் காலத்தையும் மிச்சப்படுத்தக்கூடிய இணையவழி வர்த்தகக் குறியீட்டுத் தேடல் வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

இலங்கையில் வர்த்தகக் குறியீட்டு விண்ணப்ப நடைமுறை நீண்டகாலமெடுப்பதாக உள்ளது. தனியார் துறை நிறுவனங்களிலிடமிருந்து கிடைக்கப் பெற்ற பின்னூட்டல்களின்படி, இலங்கையில் ஒரு வர்த்தகக் குறியீட்டைப் பதிவதற்கு 3-5 ஆண்டுகள் எடுக்கிறது. இருப்பினும், சில வேளைகளில் பதிவை பெற்றுக்கொள்வதற்கு 8-10 ஆண்டுகள்கூட எடுக்கக்கூடும்.

அண்மைய ஆண்டுகளில் உள்நாட்டு வர்த்தகக் குறியீட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பினும் பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறியீடுகளின் எண்ணிக்கை தேக்க நிலையிலேயே உள்ளது (உரு 1). சராசரியாக NIPO விற்கு சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு 100 உள்நாட்டு வர்த்தகக் குறியீட்டு விண்ணப்பங்களுள் 14 மட்டுமே ஒரு ஆண்டில் பதியப்படுகின்றன. இதற்கு மாறாக, மெட்றிட் உடன்படிக்கையில் இணைவதற்கு முன்னர் பல்கேரியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் தமது வதிவாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு 100 விண்ணப்பத்திற்கும் 50 க்கு மேற்பட்ட வர்த்தகக் குறியீடுகளைப் பதிவு செய்தன (உரு 2).

### மெட்றிட்க்குப் பின்: வெளிநாட்டு விண்ணப்பங்களில் ஏற்படும் அதிகரிப்பு உள்நாட்டு விண்ணப்பங்களை பரிசீலித்து முடிவுறுத்துவதில் மேலும் தாமதங்களை ஏற்படுத்தக்கூடும்.

மெட்றிட் உடன்படிக்கைக்கு இணங்கிய நாடுகளின் அனுபவங்களின்படி இந்த உடன்படிக்கையின் கீழ் வர்த்தகக் குறியீடுகளை பதிவதில் உள்ள எளிமை அவ்வுடன்படிக்கையில் இணையும் நாடுகளுக்குக் கிடைக்கப்பெறும் வெளிநாட்டு வர்த்தகக் குறியீடுகளில் ஓர் ஆரம்ப திடீர் அதிகரிப்பிற்கு காரணமாக அமைகிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, இணைவிற்கு முந்திய ஐந்து ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் இணைவிற்குப் பிந்திய உடனடுத்த ஐந்து ஆண்டுகளில் வியட்நாம் IP அலுவலகத்திற்கு வருடாந்தம் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 83%, த்தாலும். பிலிப்பைன்சிக்கு 51%, த்தாலும். துருக்கிக்கு 76%, த்தாலும் அதிகரித்தது.

இந்த நிலைமை இலங்கைக்கு ஒரு கணிசமான சவாலை ஏற்படுத்துகிறது. மெட்றிட் உடன்படிக்கையில் இணைந்த பின்னர் NIPO வெளிநாட்டு விண்ணப்பங்களில் ஓர் எழுச்சி அலையை அனுபவிக்கக்கூடும். அதேவேளை, இந்த விண்ணப்பங்களை பரிசீலித்து முடிவுறுத்துவதற்கு அது எடுக்கும் காலத்தை தற்போதைய 3-5 ஆண்டுகளிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட 1.5 ஆண்டுகள் என்ற குறுகிய காலத்திற்கு குறைக்கும்படியான அழுத்தத்திற்கு அது உள்ளாகும். தற்போதைய வேலை நிலைமைகளின்கீழ், இந்த நிபந்தனை உள்நாட்டு விண்ணப்பங்களைப் புறந்தள்ளி வெளிநாட்டு விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கும் ஒரு நிலைமைக்கு இட்டுச் செல்லும். எனவே, உள்நாட்டு விண்ணப்பங்களை பரிசீலித்து முடிவுறுத்த எடுக்கும் காலத்தில் மேலுமொரு தாமதத்தை ஏற்படுத்தி, ஒவ்வொரு ஆண்டும் உள்நாட்டு விண்ணப்பங்களுக்கும் பதிவிற்குமிடையிலான இடைவெளியை மேலும் விரிசலாக்கக்கூடிய வாய்ப்பு ஒன்று உண்டு.

வெளிநாட்டு விண்ணப்பங்களில் ஓர் அதிகரிப்பு இருந்தபோதும், இணைவிற்கு முன்னர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முனைப்பான செயற்பாடுகள் உள்நாட்டு வர்த்தகக் குறியீட்டு விண்ணப்பங்களின் மீதான பாதகமான தாக்கங்களைத் தணிப்பதற்கு உதவும். ஏனைய நாடுகளின் உதாரணங்கள் இந்த வாய்ப்பை எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, மெட்றிட் உடன்படிக்கையில் இணைந்த பின்னர் வெளிநாட்டு வர்த்தகக் குறியீட்டு விண்ணப்பங்களில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தும், வியட்நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் உள்நாட்டு விண்ணப்பங்களிலும் பதிவுகளிலும் ஓர் அதிகரிப்பைக் கண்ணுற்றன. இணைவிற்கு முந்திய ஐந்து ஆண்டு காலப்பகுதியோடு ஒப்பிடுகையில், இணைவிற்கு பிந்திய முதல் ஐந்து ஆண்டுகளில் உள்நாட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை வருடாந்தம் சராசரியாக வியட்நாமில் 140% ஆலும் பிலிப்பைன்சில் 45% ஆலும் துருக்கியில் 67% ஆலும் அதிகரித்தன. அதே காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு வர்த்தகக் குறியீடுகளின் வருடாந்த சராசரி எண்ணிக்கை வியட்நாமில் 180% ஆலும் பிலிப்பைன்சில் 28% ஆலும் துருக்கியில் 67% ஆலும் அதிகரித்தன. இலங்கை இந்த நாடுகளின் அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு இந்நாடுகளில் மேற்கெள்ள்ளப்பட்டது போன்ற முயற்சிகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில், இலங்கை எதிர்நோக்கும் இணைவிற்கு முந்திய சவால்கள் மிகப் பெரியனவாகும். ஏனெனில், தற்போது இலங்கையின் செயலாற்றுகையானது, இதே வருமான மட்டத்திலான நாடுகளின் இணைவிற்கு முந்திய செயலாற்றுகையைவிட பின்தங்கியுள்ளது. அதனால், ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கை ஒரு மேலதிக முயற்சியை மேற்கொள்ள வேண்டியேற்படலாம்.

### இணைவிலிருந்து பயனடைவதற்கு மெட்றிட்டிற்கான வழிகாட்டு வரைபடம் இலங்கையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

WIPO வினால் விதித்துரைக்கப்பட்ட மெட்றிட் உடன்படிக்கையில் இணையும் நடைமுறை ஆறு முக்கிய துறைகளை உள்ளடக்கி ஓர் ஆரம்ப ஆய்வினை நடத்துமாறு நாடுகளுக்கு நிபந்தனையிடுகிறது: அவை தலைமைத்துவம், சட்டம், நிறுவனங்கள், நடைமுறைகள், தொழில்நுட்பம் மற்றும் சமூகம் என்பனவாகும். இந்த ஆரம்ப ஆய்வின் பின்னர், இணைவதற்கு முன்னர் தீர்க்கப்படவேண்டிய அனைத்துப் பிரச்சினைகளையும் இனங்காணும் வழிகாட்டு வரைபடமொன்றை நாடு வரையவேண்டும்.

## கொள்கைக் குறிப்பு

பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண்பதற்கு ஒரு பரந்த பங்கீடுபாட்டாளர் குழுவை ஈடுபடுத்தும் திறந்த ஆலோசனை நடைமுறையொன்றைக் கொண்டிருக்கவேண்டும். இணைவதற்கான ஆலோசனை 2015 நவம்பரில் முன்வைக்கப்பட்டபோதும் NIPO அத்தகைய நடைமுறையொன்றை ஏற்படுத்துவதற்கு இதுவரை தவறிவிட்டது. பங்கீடுபாட்டாளர்களும் இணைவு தொடர்பாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றி தற்போது அறியாதுள்ளனர்.

### விதப்புரைகள்

இதன்கீழ் சமர்ப்பிக்கப்படும் விதப்புரைகள் இந்த சுருக்க ஆய்வில் இனங்காணப்பட்ட முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென வடிவமைக்கப்பட்டவையாகும். அதற்கமைய அவை NIPO வை மேலும் அதிகளவு ஏற்றுக்கொள்ளத்தக்க தரத்திலான சேவை நிறைவேற்றத்திற்குக் கொண்டு வந்து இலங்கையில் வர்த்தகக் குறியீடு பதிதலின் வினைத்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவையாகும்.

1) NIPO வை பாராளுமன்றம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அமைச்சுகளினால் மேற்கொள்ளப்படும் காலாண்டு செயலாற்றுகை மீளாய்வு சுழற்சியொன்றிற்குட்படுத்தல்

பொறுப்புக்கூறலும் செயலாற்றுகை கண்காணிப்பும் இல்லாவிட்டால், அரசாங்க நிறுவனங்களின் மோசமான சேவை நிறைவேற்றமும் உத்தேச கொள்கைகளின் மோசமான அமுலாக்கமும் கவனிக்கப்படாமலும் தடுத்து நிறுத்தப்படாமலும் போய்விடலாம். தற்போதைய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்கள் இலங்கையில் நிலவும் இப்பிரச்சினைகளுக்கு ஓரளவு பிரதிச் செயற்பாடாக அமையும். இம் மேற்பார்வைக் குழுக்கள் தமது நியாயாதிக்கத்திற்குட்பட்ட அனைத்து விடயங்களையும் விசாரிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன.

NIPO ஆனது கைத்தொழில், வாணிப அமைச்சின் வாணிபப் பிரிவின் கீழ் வருகிறது. எனவே, அவ்வமைச்சிற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தின் வியாபாரம் மற்றும் வாணிபம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு NIPO வை ஒரு கிரமமான செயலாற்றுகை மீளாய்வு சுழற்சிக்குட்படுத்துகிறது. பாராளுமன்றமும் அமைச்சும் இலங்கையை சர்வதேச வர்த்தகக் குறியீட்டு பதிவுச் செயலாற்றுகைத் தரத்திற்கு கொண்டுவருவதற்காக முக்கிய செயலாற்றுகை சுட்டிகளை (KPIs) ஏற்படுத்துவதன்மூலம் NIPO வின் பொறுப்புக்கூறும் தன்மையை மேம்படுத்த இணைந்து செயலாற்ற முடியும். முன்னேற்றத்தை ஆவணப்படுத்தவும் ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டத்திலான சேவை நிறைவேற்றத்திற்கு அது துரிதமாக மாறுவதை ஊக்குவிக்கவும் இந்த முக்கிய செயலாற்றுகைச் சுட்டிகள் காலாண்டு அடிப்படையில் மதிப்பிடப்படவேண்டும். கிரமமான மதிப்பீடுகள் NIPO அதன் பணிகளை நிறைவேற்றுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டு தாமதமின்றி தீர்க்கப்படுவதை உறுதி செய்யுவும் உதவும். உதாரணமாக, NIPO வின் தலைவர் தமது அலுவலகம் குறைவான பணியாளர்களைக் கொண்டிருப்பதாக பகிரங்கமாக முறையிட்டுள்ளார்.

2) உள்நாட்டு வர்த்தகக் குறியீட்டுப் பதிவுகள் தொடர்பாக வெளிப்படையானதும் தேடிக் கண்டறியக் கூடியதுமான இணைய தரவுத் தளத்தை வழங்குதல்

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) அரசாங்க சேவை நிறைவேற்றத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது பல நாடுகள், பதிவு செய்யப்பட்ட சகல வர்த்தகக் குறியீடுகள் தொடர்பான தகவல்களை கொண்டிருக்கக்கூடிய தேடியறியத் தக்க ஒரு பொது, இணைய தரவுத்தளத்தைக் கொண்டிருக்கின்றன.

அத்தகையதொரு தரவுத் தளம் வியாபாரங்கள் விசாரணைகள் விடுப்பதில் அல்லது வர்த்தகக் குறியீட்டு அலுவலகத்திற்கு பயணம் செய்வதில் நேரத்தையும் பணத்தையும் செலவிடாது வர்த்தகக் குறியீடுகளைத் தேடிக் கண்டறிய அவற்றிற்கு உதவும். இந்த முறையில் ஒரு தரவுத் தளத்தைத் தேடிக் கண்டறிவது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறியீடுகளைத் தெரிவு செய்வதை எளிதாகத் தவிர்த்துக் கொள்ள உதவும். எனவே, அது அவற்றின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் சாத்தியத்தைக் குறைக்கிறது. ■

The Economics Research Team of Verité Research compiled this study. The team comprised Anoji Ekanayake, Subhashini Abeysinghe, Yajna Sanguhan and Sabrina Esufally with the overall research and editorial supervision of Nishan de Mel and Gehan Gunatilleke.